**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு**

**அசல் வழக்கு எண். 146/2024**

**வா.சா. 1 ஜெயமேரி , க–பெ.பெரிய பழனிச்சாமி**

**நாள்: 16.02.2026**

**(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**1 முதல் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் கிரயம் பெற்ற சொத்து மற்றும் அதனுடைய மொத்த விஸ்தீரனமான 31 சென்ட் நிலம் ஆதியில் புளுகாண்டி மற்றும் ராமர் ஆகியோர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். மேற்படி புளுகாண்டி மற்றும் ராமர் ஆகியோர்களுக்கு சரி பாதி பாத்தியம் என்று சொன்னால் சரிதான். ராமர் என்பவருக்கு கருப்பையா, சின்னத்தம்பி, மாரிமுத்து மற்றும் பரமன் ஆகியவர்கள் வாரிசு என்று சொன்னால் சரிதான். ராமரின் வாரிசுகளுக்கு அவருக்கு பாத்தியப்பட்ட சரி பாதி பங்கில் 4 ல் 1 பங்கு பாத்தியம் என்று சொன்னால் சரிதான்.

நான் பரமன் மனைவி வேலம்மாள் என்பவரிடமிருந்து தான் வழக்குச் சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல ராமரின் வாரிசுகளுக்கு 4 சென்ட் நிலம் பாத்தியம் கிடையாது என்றும், ராமரின் வாரிசுகளுக்கு 3 ¾ சென்ட் நிலம் மட்டும் தான் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற வேலம்மாள் என்பவரிடமிருந்து தான் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய பின்னர் தான் நான் கிரயம் பெற்றேன் என்று சொன்னால் அவர்களுக்கு முன்பே

நான் கிரையம் பெற்று விட்டேன் ஆனால் பத்திரம் பதிவதற்கு காலதாமதம் ஆகிவிட்டது.

கிரைய ஆவணம் என்று எழுதப்படுகிறதோ அன்றிலிருந்து தான் சொத்தில் உரிமை வரும் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் வாங்கும் பொழுது பாதை வகைப்படுத்தப்பட்ட விபரம் தெரிந்து தான் கிரையம் வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்கிலிருந்து கிழக்காக பாதை விடப்பட்டு அனைவரும் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால், அவரவர் தேவைக்கேற்ப அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பாதைக்கு இடம் விட்டு அனுபவம் செய்து வருகிறோம். நான் சொல்வது போல அவரவர் தேவைக்கேற்ப அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பாதைக்கு இடம் விட்டு இருந்தால், சொத்தில் புழங்கிக் கொள்ள எனக்கு பாதை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பஞ்சாயத்தில் இருந்து மேற்கிலிருந்து கிழக்கு வரை சிமெண்ட் சாலை அமைத்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் என்னுடைய வீட்டு முன்பு வரை தான் அமைத்துள்ளார்கள்.

மேற்கிலிருந்து கிழக்காக பஞ்சாயத்தில் இருந்து சாலை போட முற்பட்ட பொழுது, நான் தான் என்னுடைய வீட்டுக்கு முன்னால் உள்ள இடம் எனக்கு பாத்தியப்பட்ட இடம் என்று கூறி, என்னுடைய வீட்டோடு சாலையை முடித்து வைக்க காரணமாக இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அரசு வேலையை தடுத்து, ஆக்கிரமிப்பு செய்து நான் கழிப்பறை கட்டியதால் தான் பிரதிவாதி வருவாய் வட்டாட்சியரிடம் மனு கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. 3 மற்றும் 4 பிரதிவாதி அலுவலக அதிகாரிகள் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க முயல்வதாக கூறி வழக்கு

தாக்கல் செய்துவிட்டு தற்பொழுது அதற்கு முரணாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3 முதல் 7 பிரதிவாதிகள் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அறிந்து, அதை அகற்றி விடக்கூடாது என்பதற்காக பொய்யாக இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற சொத்தின் ஒரு பகுதியை தான் எனது மகனுக்கு தானமாக கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது மகனுக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில், தெரு இருப்பதை மறைப்பதற்காக, வேண்டுமென்றே சொத்துக்கான மேற்குப் பக்க மாலினை நான் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி எனது மகனுக்கு சொத்தினை காலி மனையாக எழுதிக் கொடுத்தேனா அல்லது வீட்டுமனையாக எழுதிக் கொடுத்தேனா என்றால் காலியிடமாகத்தான் நான் கொடுத்தேன்.

நான் கிரயம் பெற்ற சொத்தினை இரு பாகமாக பிரித்து கிழக்கு பக்கம் உள்ள பாகத்தினை எனது மகனுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிக் கொடுத்துள்ளேன். நான் கிரயம் பெற்ற சொத்தில் கிழக்கு பக்கத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்தேன் என்று சொன்னால் சரிதான். அந்த வீட்டுக்கு மேற்கு பக்கம் காலி மனை இருந்தது என்று சொன்னால் சரிதான். ஆனால் மேற்படி விஷயத்தை மறைத்து மோசடியாக, எனது மகனுக்கு ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அதில் மேற்கிலிருந்து கிழக்கு அத்து வரை பாதை இருப்பதாக குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்து ஆட்சேபனை தாக்கல்

செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெறும் பொழுதே பாதை சர்வே எண் 1427/1J என வகை செய்யப்பட்டிருந்த போதும், அதை மறைத்து மோசடியாக நான் ஆவணம் பிறப்பித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் பாதையை மறைத்து தான் கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பாதையை பொறுத்து நான் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராது மாதிரி வரைபடத்திலேயே பாதை இருப்பதாக காண்பித்து தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

<u>3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

3 சொத்துக்களை காண்பித்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். 2 வது தாபசில் சொத்தைப் பொறுத்து மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். 2 வது வழக்கு சொத்துக்கான சர்வே எண் 1427/1 என்று சொன்னால் அது குறித்து எனது மகனுக்கு தான் தெரியும். அதன் மொத்த விஸ்தீரணம் 31 சென்ட் ஆகும். மொத்த சொத்தில் தென்வடல் 3 மீட்டர் கிழமேலாக 9 மீட்டர் அளவுகளில் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். மேற்குறிப்பிட்ட அளவுகளுக்குள் தான் வீடு கட்டப்பட்டுள்ளது என்பதை நிரூபணம் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கேட்டு மனு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் 2 வது தபசில் சொத்தினை தனியாக பிரித்து காட்டவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண் 1427/1 க்கான பட்டா ( பட்டா எண் 2523) 13 நபர்களுக்கு கூட்டாக இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். 2 வது தபசில் சொத்தை பொருத்தவரையில், தனியாக பிரித்து காட்ட இயலாது என்பதால் அதைப் பொறுத்து எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் 2 வது பரிகாரமாக 3 மற்றும் 4 பிரதிவாதிகளால் செய்யப்பட்ட நத்தம் நிலவரித் திட்ட காலத்தில் செய்யப்பட்ட வரைபடமும் உட்பிரிவும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று கேட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எந்த காரணத்திற்காக வரைபடமும் உட்பிரிவும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று வழக்குரையில் நான் குறிப்பிடாத காரணத்தினால், 2 வது பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு